TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8064896

06/AC/2020 02.06.2020

1. District : மாவட்டம் Chennai | PS: காவல்நிலையம் Vigilance and Anti-corruption Chennai City - II Detachment | Year: ஆண்டு | FIR No.: மு.த.அ. எண் | Date: நாள்

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்: U/S 7 of PC Act
(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: Amended 2018.
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 29.5.2020 | Date to : நாள் வரை
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.06.2020 | Time : நேரம் at 12:30 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Chennai Mogappair 16 km.
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. Bharathan | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Sundaramoorthy
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 11/2020 | (d) Nationality : நாட்டினம் Indian. | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Machinery Spare parts Sales Own Business | (g) Address : முகவரி No. 483, 2nd Block, Mogappair West, Chennai - 37.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
A-1 Tmt. Valarmathi, Asst. Commissioner Labour
A2 Th. Thonpankasam. Inspector of Labour

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
- No - delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ............ Rank ............ to take up the Investigation / Refused Investigation / transferred to PS ............on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............ பதவி ............ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

8/6/20

8/6/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 8/6/2020
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் V. Selvi
Rank: நிலை Inspector of Police No. எண் ............
Vigilance & Anti-Corruption
Chennai City-II Detachment
Alandur, Ch-16.

**பணிந்து சமர்ப்பிக்கபடுகிறது** : 05.06.2020ந் தேதி பிற்பகல் 12.30 மணியளவில் நான் அலுவலக பணியில் இருந்தபோது சென்னை 37, முகபேர் மேற்கு, 2 பிளாக், எண்.483 சேர்ந்த திரு.பரதன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று வாதியை பற்றியும் எதிரியை பற்றியும் தனி தனியாக ரகசிய விசாரணை மேற்கொண்ட பிறகு இன்று 08.06.2020ந் தேதி காலை 08.30 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை, நகரபிரிவு-2 ன் குற்ற எண்.06/AC/2020/CC- II, u/s 7 of Pc Act 2018 பிரகாரம் வழக்கு பதிவு செய்தேன். மேற்படி புகாரின் விவரம் பின்வருமாறு:- அனுப்புநர்: நாள்:06.06.2020, திரு.எஸ்.பரதன், வ/42, த/பெ.சுந்தரமூர்த்தி, எண்.483, 2 பிளாக், முகபேர் மேற்கு, சென்னை - 37, செல்- 9840438637, பெறுநர்: உயர் திரு.காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, நகரப்பிரிவு - II, ஆலந்தூர், சென்னை-16, ஐயா, நான் கடந்த 15 வருடங்களாக முகபேர் மேற்கு, எண்.483, இரண்டாவது பிளாக்கில் என் குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். கடந்த 2011 ஆம் ஆண்டிலிருந்து நான் ஸ்ரீ டெக் என்ற பெயரில் மின்னணு எடை இயந்திரத்தின் உதிரி பாகங்கள் விற்பனை செய்து வருகிறேன். கடந்த 2014 ல் புதிய மின்னணு எடை இயந்திரம் வாங்கி விற்பனை செய்யவதற்கு அம்பத்தூர் தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகத்தில் மூலம் கடந்த 2014 முதல் 2019 வரை உரிமம் பெற்றேன். அதன் எண்.4253, ஸ்ரீ டெக் என்ற பெயரில் வழங்கப்பட்டதை புதுபிக்க வேண்டி இருந்ததால், 06.12.2019ம் தேதி ஆன்லைனில் விண்ணபித்து அதற்கான விண்ணப்ப படிவம் எண்.330922-2375 பெறப்பட்டது. அன்றைய தினமே புதுபிப்பதற்கான தொகை ரூ.2,500/-ஐ ஆன்லைன் மூலம் செலுத்தி அதற்கான ரசீது எண். Labour/2019/2609 வழங்கப்பட்டது. அதை தொடர்ந்து எனது தாய் உடல் நிலை சரியில்லாமல் இருந்த காரணத்தினாலும், அரசு அலுவலகங்கள் கொரோனவால் லாக்டவுன் செய்யப்பட்டு இருந்ததாலும் பின்தொடர முடியவில்லை. மே மாதத்திலிருந்து அரசு அலுவலகங்கள் இயங்குவதினால் நான் 29.05.2020 அன்று தொழிலளார் உதவி ஆய்வாளர் திரு.ஜான் பிரகாசம்

என்பவரை கைபேசியில் தொடர்பு கொண்டு என்னுடைய உரிமம் புதுப்பித்தல் பற்றி கேட்டேன். அதற்கு அவர் ஆன்லைனில் விண்ணப்பித்தால் மட்டும் போதாது அதற்கு கொஞ்சம் செலவாகும், தொழிலாளர் உதவி ஆணையாளர் திருமதி.வளர்மதி அவர்கள் ரூ.10,000/- கேட்டுள்ளார். அவருக்கு கொடுக்கவேண்டிய லஞ்ச பணம் ரூ.10,000/- கொடுத்தால் தான் உனக்கு புதுப்பித்தல் உரிமத்தை கொடுப்பார் என்று சொன்னார். நான் அவரிடத்தில் விற்பனையாளர் உரிமம் பெற்று இதுநாள் வரை எடை இயந்திரங்கள் எதையும் விற்பனை செய்யவில்லை என்று கூறியதற்கு உதவி ஆணையாளரிடம் வந்து பேசிக் கொள்ளுங்கள் என்னால் எதுவும் செய்யமுடியாது என்று சொல்லி எனது கைபேசி அழைப்பை துண்டித்துவிட்டார். அதனால் நான் ஜீன் 02ம் தேதி சுமார் 12.00 மணியளவில் திருவள்ளுரில் உள்ள தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகம் சென்றேன், அங்கு திரு.ஜான் பிரகாசம் இருந்தார். அவரிடம் சென்று பார்த்தபோது திரு.ஜான் பிரகாசம் அவர்கள் எனது விண்ணப்பத்தை எடுத்து காண்பித்து அதில் என்னுடைய அலுவலகத்தை ஆய்வு செய்ததாக என்னிடம் கையெழுத்து வாங்கினார். அப்போது உதவி ஆணையரிடம் ரூ.10,000/- கொடுத்துவிட்டாயா என்று கேட்டார். ஆனால் நான் அவ்வளவு பணம் என்னால் தர முடியாது என்றேன். அதற்கு அவர் என்னை தொழிலாளர் உதவி ஆணையர் அவர்களிடமே சென்று பேசிக் கொள்ளுங்கள் என்று சொன்னார். நான் அப்போதே அங்கு அலுவலகத்தில் இருந்த தொழிலாளர் உதவி ஆணையர் திருமதி.வளர்மதி மேடத்தை சந்தித்து எனது எடை இயந்திர விற்பனையாளர் லைசென்ஸை புதுபிக்க ஆன்லைனில் பதிவு செய்த ரசீதை காண்பித்து எனது விற்பனையாளர் லைசென்ஸை புதுப்பித்து தருமாறு கேட்டப்போது, அவர் என்னிடத்தில் ரூ.10,000/- கொடுத்தால்தான் லைசென்ஸ் புதுபித்து கொடுக்கப்படும் என்று சொன்னார். நான் அவரிடத்தில் எடை இயந்திரத்திற்கான விற்பனையாளர் உரிமம் பெற்று இதுநாள் வரையில் விற்பனை எதுவும் செய்யாததால் வருமானம் ஏதும் இல்லாத நிலையில் அவ்வளவு பணம் என்னால் கொடுக்க இயலாது என்றும் ஏதாவது பார்த்து செய்யும்படியும் கேட்டேன். ஆனால் அவர் நீங்கள் 5 வருடங்களுக்கு ஒரு

முறை உரிமம் புதுபிக்கும் போதுதான் எனக்கு பணம் கொடுக்கபோகிறீர்கள் இடையில் எதுவும் செய்யப்போவதில்லை, கேட்ட பணம் ரூ.10,000/- தை கொடுத்தால் உரிமம் வழங்கப்படும் என்று சொல்லிவிட்டார். நான் பணம் ஏற்பாடு செய்வதாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனக்கு லைசென்ஸ் புதுப்பிக்க லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாததால் திருவள்ளுர் தொழிலாளர் உதவி ஆணையாளர் திருமதி.வளர்மதி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன், இப்படிக்கு (ஒப்பம்) (S.பரதன்), 08.06.2020, Sir/Madam, Received the complaint on 05/06/2020 at 12.30 hrs after verifying the veracity of the complaint and reputation of the accused, registered a case in V&AC, City –II Detachment, in Cr.No.06/AC/2020/CC-II u/s 7 of PC Act 2018, dt.08.06.2020 at 08.30 hrs. The Original FIR along with complaint was sent to the court of Hon'ble Spl. Judicial Magistrate, Chennai and copies were sent to the Officer's concerned. (Sd) (V.Selvi) Inspector of Police, Vigilance and Anti-Corruption, Alandur, Chennai-16.

8/6/2020
Inspector
CC-II, Alandur
Ch-16.